**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.25/2024** |
| Sessions : | | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution : | **P.W.**11 |
| | Defence : | **D.W.** |
| | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | பெரியசாமி | **S/o. :** | கிருஷ்ணசாமி |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **10.03.2025**

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1, 2, 3, 5 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் வடகராம்பூண்டியை சேர்ந்தவர். விவசாயம் தொழில் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 6, 7 ஆண்டுகளுக்கு முன்பாக என் அண்ணன் மகன் அழகுதுரை போன் மூலம் ஆற்றில் பிரச்சனை என்று சொன்னார். நான் வந்துபார்த்த போது என் அண்ணன் நல்லதம்பி உடையார் ஆற்றங்கரையில் கிடந்தார் வண்டி வந்து அவரை ஏற்றிக்கொண்டு மருத்துவமனைக்கு போனோம். சிறிது நாட்கள் கழித்து வி.களத்தூர் போலீசார் சம்பவம் பற்றி விசாரித்து என்னை சம்பவ இடம் அழைத்து போய் காட்ட சொன்னார்கள். வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகஜர் அ.தசா.ஆ.6 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

பார்வை மகஜரிலுள்ள கையெழுத்து சம்பவ இடத்தில் வைத்து தான் போட்டேன். எழுதிய தாளில் தான் கையெழுத்துபோட்டேன். மதியம் 12, 1 மணிக்கு கையெழுத்து போட்டிருப்பேன். பார்வை மகஜரில் வெள்ளிக்கிழமை என்று போட்ட இடத்திலும், தேதி போட்ட இடத்திலும் திருத்தம் இருப்பது பற்றி எனக்கு தெரியாது. என்னை விசாரித்த போலீசார் என்ன பதவி உடையவர் என்று எனக்கு தெரியாது. புகார் கொடுத்தது என் அண்ணன்தான். நான் பார்வை மகஜரில் காவல்நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டேன் என்றும் என் அண்ணனுக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.